திரு. என். வரதராஜன் : அணு விஞ்ஞானத்தையும் தமிழிலே படைக்கக் கூடிய தமிழர்கள் உருவாகிக்கொண்டிருக்கிற நேரத்திலே சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுப்பதைப்போன்று சிறந்த புத்தகங்களுக்கும் ஊக்கம் அளிக்கக் கூடிய முறையில் பரிசு கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஒரு அரிய யோசனை. அதுபற்றி ஒரு வாரத்திற்கு முன்னால் பரிசீலனை செய்யப்பட்டது. இப்பொழுது நூல்களைத் தோற்றுவிப்பதற்கு எக்ஸ்பர்ட் கமிட்டி ஒவ்வொரு சப்ஜெக்டுக்கும் போடப்பட்டு அந்தக் குழு எழுதச் சொல்லி பரிசு அளிக்கிறார்கள். அதை மாற்றியமைத்து, புதிய புதிய விஞ்ஞான நூல்களைத் தோற்றுவித்து நல்ல நூல்கள் என்று எவற்றை முடிவு செய்கிறார்களோ, அவற்றிற்கு ஒரு பரிசுத் தொகை கொடுப்பது என்பது யோசனையில் இருக்கிறது. பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் மூலக் கேள்வியிலிருந்து தடம்புரண்டு ஓடுகின்றன. கல்வி ஆணைக் குழுவின் பரிந்துரை பற்றியது மூலக் கேள்வி.

திரு. ப. மகாதேவன் : தமிழ் ஆக்கம் செய்யும்பொழுது நல்ல, கருத்துக்களுக்கு மட்டும் இடம் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள கருத்துக்கள் தமிழிலே வரும்பொழுது உதாரணமாக ஹாமில்டன் பாலம் என்று இருந்தது ஹாம்படன் ஆகி, பிறகு அம்டன் ஆகி, பிறகு பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று ஆகியது. அதைப்போன்று டிரங்க் கால் என்பதற்குத் தமிழ், முண்டக் கூவி என்று சொல்லுகிறார்கள். தலையில்லா முண்டம் என்று சொல்லுவதைப்போல் டிரங்க் என்பதற்கு முண்டம் என்று சொல்லி, கால் என்பதற்குக் கூவி என்று சேர்த்து வார்த்தைகள் வருகின்றதை நல்லது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே வருகிறது அதுமாதிரி ? இதுவரை கேட்டதே கிடையாதே.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழிலே வரவேண்டுமென்ற ஆர்வம் இருக்கும்பொழுது சில வேளைகளில் நம்மை நாமே இழிவுபடுத்தக் கூடிய நிலை உருவாகிவிடுகிறது. டிரான்ஸிஷன் பீரியட் வருகின்ற நேரத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கலாம். காலம் செல்லச் செல்லத்தான் நல்ல சொற்கள் உருவாகும். இதற்குமுன்பு பயன்படுத்தாத சொற்கள் இப்பொழுது மாணவர்களிடம் நாம் காணமுடிகிறது. காலம் செல்லச் செல்ல நல்ல தமிழ்ச் சொற்கள் வந்துவிடும்.

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் கிளாரிபிகேஷன் சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றையெல்லாம் வினா நேரம் முடிந்தபின் வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. விநாயகம் : இப்பொழுதே சொல்லிவிட்டால் ரெலவண்ட் ஆக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சொல்லுங்கள்.

கல்வி இலாகாப் பணியாளர்கள்.

*157 வினா.—**திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கல்வி இலாகாவில் பணிபுரிபவர்களை அந்தந்த மாவட்டங்களுக்குள்ளேயே மாறுதல்செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

1969 மார்ச் 4]

திரு. பி. வேலுசாமி : இந்தக் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களையும், அதிகாரிகளையும் ஏப்ரல், மே, மாதங்களில் மாற்றம் செய்தால்தான் அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க முடியும். ஆகவே, அப்படிச் செய்வதுதான் சரி என்று அரசாங்கம் கருது றதா ? இடையிலே மாற்றம் செய்வதாக இருந்தால் அந்தந்த ஜில்ல வுக்குள்ளேயே மாற்றச் செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டும் நல்லதுதான். இ· பொழுதுகூட ஆண்டுக்கு ஒரு முறைதான் மாறுதல் செய்யப்படுகிறது இடையிலே தேவைப்படுமானல் சில காரணங்களினுல் செய்கிருர்கள். அதில் தவறு இருந்தால் பரிசீலனை செய்கிருர்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, ஆசிரியர்களை மாற்றுவது மே மாதத்திற்குள் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, ஆசிரியர்களை நியமிக்கின்ற நேரத்திலும் ஜூன் மாதத்திற்குள்ளே நியமித்துவிட வேண்டும். அப்படியில்லாமல் சில பள்ளிகளிலே காலாண்டுத் தேர்வு வந்த பிறகு நியமிக்கின்ற நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து தவையான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு சில இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால் பரிகாரம் காண முயற்சி எடுத்து இருக்கிறோம். ஆனல், பெரும்பாலும் இடையிலே ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருப்பதுதான் நல்லது.

அலங்காநல்லூர்—பாலமேடு பகுதியில் சுண்ணும்புப் படிவம்

*158 வினு—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் சுத்தமான சுண்ணும்புக் கல் கிடைப்பதாகத் தகவல் ஏதேனும் அரசாங் துக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அப்பகுதியில் எவ்வளவு கிடைக்குமெனக் கணக் கெடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை ஐயா, அந்தப் பகுதியில் 1959–60–ல் இந்தியப் புவியியல் துறையினர் ஆராய்ச்சி நடத்தியதில், சுத்தமான சுண்ணும்புக் கல் கிடைப்பதாகத் தெரியவில்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

Railway lines proposed to be closed.

* 159 *Q.*—THIRU N. KASIRAMAN :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether information has been received from the Central Ministry of Railways about the removal of railway lines between Needamangalam and Mannargudi adn Thiruthuraipoondi and Vedaranyam;

(*b*) whether any intimation has been received from the same Ministry about the removal of any other short distance railway lines in Thanjavur district;